**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081637

1. District : மாவட்டம் மதுரை | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு | Year: ஆண்டு 2023 | FIR No.: மு.த.அ. எண் 03/2023 | Date: நாள் 25.04.2023

2. (i) Act சட்டம்: Pc Act 1988 | Sections பிரிவுகள்: U/s. 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: as amended by the PC
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: (amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 1) 18.04.2023 மதியம் சுமார் 03.00 மணி 2) 24.04.2023 காலை சுமார் 11.45 மணி
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.04.2023 | Time நேரம் 08.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.04.2023 | Time நேரம் 08.45 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 52 கி.மீ தென் மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், பூசலப்புரம் கிராமம், பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. சு. கருப்பு | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. சுப்பையா
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05/04/1985 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் கொத்தனார் தொழில் | (g) Address : முகவரி க.எண் 4/28, சின்னகாம்பட்டி, பூசலப்புரம் (அஞ்சல்), பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திருமதி. விஜயராணி, கிராம நிர்வாக அலுவலர், பூசலப்புரம் கிராமம், மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..........—.......... Rank ..........—.......... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........—..........on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..........—.......... பதவி ..........—.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..........—.......... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. கருப்பு 25/04/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.04.2023 at 09.35 hrs.

Name: பெயர் த. சூரியகலா,
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண்
உ.த.க. பிரிவு,
மதுரை (25.04.2023

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 25.04.2023-ஆம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு நான் (T.சூரியகலா, காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு, மதுரை) மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியிலிருந்த போது, மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், பூசலப்புரம் அஞ்சல், சின்னுகாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சுப்பையா மகன் திரு. கருப்பு என்பவர் ஆஜராகி எழுத்துபூர்வான புகார் கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் சு.கருப்பு, த/பெ. சுப்பையா, கதவு எண். 4/28, சின்னுகாம்பட்டி, பூசலப்புரம் அஞ்சல், பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் சின்னுகாம்பட்டி கிராமத்தில் எனது குடும்பத்துடன் இருந்து, கொத்தனார் வேலை செய்து வருகிறேன். நான் 12-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தந்தை திரு.சுப்பையா அவர்கள் பெயரில் உள்ள பேரையூர் வட்டம் பூசலப்புரம் கிராம பட்டா எண்.76, சர்வே எண். 88/2A-ல் கட்டுப்பட்ட புஞ்செய் 59 செண்டு நிலத்தை என்னுடைய பெயரில் எழுமலை சார்-பதிவாளர் அலுவலகம் ஆவண எண். 1263/2023, நாள்: 12.04.2023-ன் படி தானசெட்டில்மெண்டாக எனது தந்தை எழுதி கொடுத்துள்ளார். எழுமலை சார்-பதிவாளர் அலுவலகத்திலிருந்து, மேற்கண்ட 59 செண்டு நிலத்தை என்னுடைய பெயரில், பட்டா பெயர் மாற்றம் செய்ய, அன்றைய தினமே ஆன்லைனில் விண்ணப்பம் எண். 2023/0103/24/261185-ன் படி என்னுடைய செல் எண்ணான 96881-20564-ற்கு மெசேஜ் வந்தது. அதன் அடிப்படையில் கடந்த 18.04.2023-ஆம் தேதியன்று மதியம் சுமார் மூன்று மணியளவில், எனது பெயரில் எழுமலை சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண். 1263/2023, நாள்: 12.04.2023-ன் நகலை எடுத்துக் கொண்டு, பூசலப்புரம் கிராமத்தில் உள்ள பூசலப்புரம் கிராம நிர்வாக அலுவலரை சென்று, பார்த்து கொடுத்தேன். கிராம நிர்வாக அலுவலர் திருமதி.விஜயராணி அவர்கள், உன்னுடைய விண்ணப்பம் எனக்கு ஆன்லைனில் வந்துள்ளது எனக் கூறினார். பின்னர் என்னுடைய ஆவணத்தை பார்வையிட்டு, எனது தந்தையின் பெயரில் உள்ள பட்டாவை என்னுடைய பெயரில் மாற்றி விடலாம் என்று கூறி, என்னிடம், பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு, அவரது பரிந்துரை செய்து, எனது பெயரில் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய ரூ.5,000/- பணம் கொண்டு வரச்

சொன்னார். நான் அவரிடம், நீங்கள் கேட்கும் பணம் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர், அரசாங்கதிற்கு அல்ல. எனக்கு தனியாக செலவுக்கு ரூ.5,000/- கொடுக்க வேண்டும் என்று கூறினார். அதற்கு நான், கொத்தனார் வேலை செய்து கஷ்டப்பட்டு வருகின்றேன். சில சமயங்களில் வேலையும் கிடைப்பதில்லை அதனால் பார்த்து எனக்கு செய்யுங்க என்று கூறினேன். அதற்கு, VAO அவர்கள், உங்களுக்கு குறைத்துதான் சொல்லியிருக்கிறேன், மற்றவர்களுக்கு அதிகமாக வாங்குவேன் என்று என்னிடம் கூறினார். மேலும் அவர், ”நான் கேட்ட பணம் ரூ.5,000/- கொண்டு வந்தால்தான், பட்டா பெயர் மாற்றம் செய்ய உங்கள் விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுப்பேன், இல்லையென்றால் நீங்கள் அலைய வேண்டியதான்” என்று என்னிடம் கண்டிப்பாக கூறிவிட்டார். நானும் வீட்டில் கலந்து பேசிவிட்டு வருவதாக கூறிவிட்டு வந்து விட்டேன். பின்பு விஜயராணி அவர்கள் கேட்ட பணம் என்னால் ரெடி பண்ண முடியவில்லை. அதனால் மீண்டும் நேற்று (24.04.2023) காலை 11.45 மணியவில் பூசலப்புரம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.விஜயராணி அவர்களை நேரில் சந்தித்து, என்னுடைய பட்டா பெயர் மாற்றம் செய்வது குறித்து கேட்டேன். அதற்கு அவர், ”நான் கேட்ட பணம் ரூ.5,000/- கொண்டு வந்துயிருக்கியா” என கேட்டார். நான் அவரிடம், ”என்னால் அவ்வளவு புரட்ட முடியவில்லை, கான்ட்ராக்டர்காரரின் அப்பா இறந்து போய்விட்டதால், கொத்தனார் வேலைக்கு என்னால் தற்போது செல்ல முடியவில்லை. அதனால் பார்த்து செய்யுங்க மேடம்” என்று கூறினேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர், ”நான் ஏற்கனவே சொன்னதுதான், ரூ.5,000/- கொடுத்தால்தான் வேலையாகும்” என்று என்னிடம் கண்டிப்பாக கூறிவிட்டார். நானும் சரியென கூறிவிட்டு வந்து விட்டேன். ஆனால், அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, எனது தந்தை எனக்கு தானமாக கொடுத்த நிலத்திற்கு அரசு இலவசமாக பட்டா பெயர் மாற்றம் செய்து தர வேண்டிய வேலைக்காக, தனது பரிந்துரையை செய்து, எனது பெயரில் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய என்னிடம் ரூ.5,000/- லஞ்சம் கேட்கும், பூசலப்புரம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி. விஜயராணி அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/- கொண்டு வந்துள்ளேன். மேலும் எனது பெயரில் எனது தந்தை தானமாக கொடுத்த எழுமலை ஆவண எண். 1263/2023, நாள்: 12.04.2023 ஆவணத்தின் நகலையும் மற்றும் எனது செல்லிற்கு சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு

புதன் கிழமை மாலை 05.47 மணிக்கு வந்த SMS -ன் ஸ்கிரீன் சாட்-நகலையும் இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, (ஒ-ம்) சு.கருப்பு 25.04.2023. Sir, received the written complaint on 25.04.2023 at 08.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance & Anti-Corruption wing, Chennai and I registered a case in Madurai Vigilance & Anti-Corruption in Cr. No. 03/2023 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.45 hrs and took up investigation Sd./-XXXXXX (T.Suriyakala) 25.04.2023, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR, original written complaint of Tr.S.Karuppu, S/o. Subbiah, Chinnakampatti, Poosalapuram (Post), Peraiyur Taluk, Madurai district along with the documents enclosed by the complaint is submitted to the Hon'ble Special Judge for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai. The amount of Rs.5,000/- brought by the Complainant Tr.S.Karuppu was returned to him for further trap proceedings.

25.4.23

(T. Suriyakala)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.